# பிதாக்கள் எப்படியோ, குமாரர்களும் அப்படியே (7:2-53)

நமது கடந்த பாடம் விசுவாச வீரர்களில் ஒருவரைப் பற்றிய பண்புகளைப் பற்றியதாகும்: அவர் முதல் வேத சாட்சியாக மரித்த ஸ்தேவான் ஆவார். இப்பொழுது, ஸ்தேவான், சனதெரீன் சங்கத்தாருக்கு முன்பாகப் பிரசங்கித்த பிரசங் கத்தைச் சற்று ஆழமாகப் காணப்போகின்றோம்.

ஸ்தேவானின் பிரசங்கம் தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். அப்போஸ்தலர்களைத் தவிர மற்றொருவரால்[1] பேசப்பட்ட தாக நடபடிகள் நூலில் காணப்படும் சிலவற்றில் இது ஒன்றாகும் - இந்நூலிலேயே மிக நீளமான பகுதியாக இது உள்ளது! இப்பிரசங்கத்தின் கடைசி வார்த்தைகளிலிருந்து நாம் எடுத்துள்ள குறிப்பின் (7:51-53) உதவியுடன் இப்பாடமானது "பிதாக்கள் எப்படியோ, குமாரர்களும் அப்படியே" என்று தலைப்பிடப்பட்டுள்ளது. "யூதர்களின் வரலாறு பற்றிய மறு கண்ணோட்டத்துடன், முடிவில் சில அவமானச் சொற்களைக் கொண்டுள்ளது அவ்வளவே" என்று கூறிச் சிலர் இப்பிரசங் கத்தை ஒதுக்கி விடுகின்றனர். ஆயினும் இது ஆவியானவராலே ஏவப்பட்டுப் பேசப்பட்டது என்பதும் - இப்பாடத்தின் ஒவ் வொரு வாக்கியமும் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தது என்பதும் எல்லா வகையிலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஸ்தேவான் தமது தற்காப்பு வாதத்தில் மூன்று அடிப்படைக் கருத்துக்களை வலியுறுத்தினார்: (1) அவர் தமக்கெதிராகச் சாட்டப்பட்ட குற்றங்களுக்குத் தம்மை தற்காத்தார். (2) இவ்வாறு செய்ததன் மூலம், தாமல்ல தம்மைக் குற்றம் சாட்டியவர்களே - தமக்கெதிராக் கூறிய குற்றத்தைச் செய்த - குற்றவாளிகள் ஆவார்கள் என்று வலியுறுத்தினார். (3) அவரது பாடம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருந்தது. நாம்

காணப்போகிறபடி, பிரசங்கம் முழுவதிலும் - சில சமயம் வெளிப்படையாகக் கூறப்பட்டும், பல சமயம் மறைமுக மாகவும்-மேசியாவைப் பற்றிய வலியுறுத்தம் காணப்பட்டது.[2]

## பரிசுத்தமான உடன்படிக்கை (7:2-16)

ஸ்தேவான், "சகோதரரே, பிதாக்களே கேளுங்கள்" என்று தொடங்கினார் (7:2அ). அவரது வார்த்தைகள் ஆலோசனைச் சங்கத்தாருக்கு மரியாதையைத் தெரிவித்தன. யூதர்கள், தங்கள் இனத்தாரின் வரலாறு மறுபடியும் கூறப்படுவதைக் கேட்க விரும்பினர்; அவ்வரலாறு அவர்கள் தேவனுடைய மக்கள் என்பதை வலியுறுத்திற்று, ஸ்தேவானின் முதல் வார்த்தைகள் பாதுகாப்பற்றவைகளாயிருந்தன:

> ''நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மொசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: 'நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா' என்றார். அப்பொழுது அவன் கல்தேயர்[3] தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம் பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப் பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக் கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாம லிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது: 'உனக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்திரமாகத் தருவேன்' என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். அந்தப்படி தேவன் அவனை நோக்கி: 'உன் சந்ததியார் அந்நிய தேசத்தில் சஞ்சரிப்பார்கள்; அத்தேசத்தார் அவர்களை அடிமைகளாக்கி, நானூறு வருஷம் துன்பப் படுத்துவார்கள். அவர்களை அடிமைப்படுத்தும் ஜனத்தையோ நான் ஆக்கினைக்குட்படுத்துவேன். அதற்குப் பின்பு அவர்கள் புறப்பட்டுவந்து இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார் கள்' என்றார். மேலும் விருத்தசேதன[4] உடன்படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார். அந்தப்படியே அவன் ஈசாக்கைப் பெற்றபோது, எட்டாம் நாளிலே அவனை விருத்தசேதனம் பண்ணினான். ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னி ரெண்டு கோத்திரப் பிதாக்களையும் பெற்றார்கள்'' (வ. 7:2ஆ-8).

ஸ்தேவான்,தேவனைத் தூஷித்ததாகக் குற்றம் சாட்டப் பட்டார் (6:11), ஆனால் அவர் தேவனுக்கு மிகவும் ஆழமான கனத்தைச் செலுத்தினார். அவர் தேவனை ‘‘மகிமையின் தேவன்’’ என்று அழைத்தார், மற்றும் அவர் ஆபிரகாமின் வாழ்விலும் மற்றவர்களின் வாழ்விலும் எவ்விதம் தேவன் செயல்பட்டிருந்தார் என்றும் குறிப்பிட்டார்.

ஸ்தேவான் அநேகமாக மற்ற சில சத்தியங்களையும் நிலைநாட்டினார்: நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவ தற்கும், தேவாலயம் கட்டப்படுவதற்கும் நீண்ட காலம் முன்னதாக ஆபிரகாமின் வாழ்க்கையில் மாபெரும் நிகழ்ச்சிகள் நடந்தன! அத்துடன் அவர் (ஸ்தேவான்) மறுபடியும் நினை வுக்குக் கொண்டுவந்த பல நிகழ்ச்சிகள் பலஸ்தீனத்திற்கு வெளியே நடைபெற்றவைகளாயிருந்தன! பின்வருவதை நாம் அறிகின்றோம்: ஆபிரகாமுக்குத் தரப்பட்ட வாக்குத்தத்தங் களை ஸ்தேவான் குறிப்பிட்டபோது, ஒவ்வொரு யூதருடைய மனமும் எல்லா நாடுகளையும் ஆசீர்வதிக்க வரவிருந்த மேசியாவைப்[5] பற்றிய வாக்குத்தத்தத்தையும் மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வந்திருக்கும்!

முற்பிதாக்களைப்பற்றிப் பேசும்போது, ஸ்தேவான் ஒரு புதிய கருத்தை அறிமுகப்படுத்தினார்: யூதர்களின் வரலாறு முழுவதிலும் அவர்கள், தேவனால் நியமிக்கப்பட்டிருந்த விடுதலையின் செய்தியாளர்களைப் புறக்கணித்திருந்தனர். அவர்களின் முற்பிதாக்களால் முதன்முதலாகப் புறக்கணிக்கப் பட்டவர் தேவனால் அங்கிகரிக்கப்பட்டிருந்த விடுதலையின் செய்தியாளர் யோசேப்பு ஆவார்:

> ‘‘அந்தக் கோத்திரப்பிதாக்கள் பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்குக்[6] கொண்டுபோகும்படியாக விற்றுப் போட்டார்கள். தேவனோ அவனுடனேகூட இருந்து,[7] எல்லா உபத்திரவங்களினின்றும்[8] அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமூகத்திலே அவனுக்குக் கிருபையை யும் ஞானத்தையும் அருளினார்; அந்த ராஜா அவனை எகிப்து தேசத்திற்கும் தன் வீட்டனைத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தி னான். பின்பு எகிப்து,[9] கானான் என்னும் தேசங்களிலெங்கும் பஞ்சமும் மிகுந்த வருத்தமும் உண்டாகி, நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரம் கிடையாமற் போயிற்று. அப்பொழுது எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்விப்பட்டு, நம்முடைய பிதாக்களை முதலாந்தரம் அனுப்பினான்.

இரண்டாந்தரம் யோசேப்பு தன்னுடைய சகோதரருக்குத் தன்னைத் தெரியப்படுத்தினான். யோசேப்புடைய வம்சமும் பார்வோனுக்கு தெரிய வந்தது. பின்பு யோசேப்பு, தன்னுடைய தகப்பன் யாக்கோபும் தன்னுடைய இனத்தார் யாவருமாகிய, எழுபத்தைந்து பேரை[10] அழைக்க அனுப்பினான்"[11] (7:9-14).

இவ்விடத்தில், ஸ்தேவானால் வலியுறுத்தப்படும் மூன்று உண்மைகளைக் கவனியுங்கள்: (1) (முற்பிதாக்களும், யூதமக்களின் "பிதாக்களுமாகிய") யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பைப் புறக்கணித்தனர். (2) தேவன் அவர்களுக்கு (அவர்கள் எகிப்துக்குத் தானியம் வாங்க வரும்போது) இரண்டாவது வாய்ப்பைக் கொடுத்தார். (3) இரண்டாவது முறை அவர்கள் யோசேப்பைத் தங்கள் இரட்சகராய் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று - இல்லையென்றால் அவர்கள் (பஞ்சத்தினால்) மரிக்க வேண்டியிருந்திருக்கும். ஸ்தேவான் இப்பிரசங்கத்தில் இன்னொரு இரட்சகரைக் குறித்து இதே உண்மைகளை வலியுறுத்த வேண்டியிருந்தது.

ஸ்தேவான் இப்போது வரலாற்றில் நானூறு ஆண்டுகளைக் கடந்து விரைந்தார்:

அந்தப்படி யாக்கோபு எகிப்துக்குப் போனான். அவனும் நம்முடைய பிதாக்களும் மரித்து, அங்கேயிருந்து சீகேமுக்குக் கொண்டு வரப்பட்டு, ஆபிரகாம் சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய சந்ததியாரிடத்தில் ரொக்கக்கிரயத்துக்கு வாங்கி யிருந்த கல்லறையில் வைக்கப்பட்டார்கள் (7:15, 16).

## பரிசுத்த கட்டளைகள் (7:17-43)

மோசேக்கும் (6:11), நியாயப்பிரமாணத்திற்கும் (6:13) எதிராகப் பேசியதாக, ஸ்தேவானின்மீது குற்றம் சாட்டப் பட்டது. அவரது பிரசங்கத்தின் மையப்பகுதி மோசேயின் வரலாற்றையே கூறியது. அவர் பின்னணித் தகவல்களுடன் இதைத் தொடங்கினார்:

ஆபிரகாமுக்கு தேவன் ஆணையிட்டு அருளிய வாக்குத்தத்தம் நிறைவேறுங்காலம் சமீபித்தபோது, யோசேப்பை அறியாத வேறொரு ராஜா தோன்றின காலமளவும், ஜனங்கள் எகிப்திலே பலுகிப் பெருகினார்கள். அவன் நம்முடைய ஜனங்களை வஞ்சனையாய் நடப்பித்து, நம்முடைய பிதாக்களின் குழந்தைகள் உயிரோடிராதபடிக்கு அவர்கள்

*அவைகளை வெளியே போட்டுவிடும்படி செய்து அவர்களை உபத்திரவப்படுத்தினான் (7:17-19).*

இந்த வருத்தத்திற்குரிய நேரத்தில், தேவன் தமது மக்களை விடுவிக்கப் பயன்படுத்திய ஒருவர் பிறந்தது எப்படி என்று ஸ்தேவான் தமது பிரசங்கத்தில் தொடர்ந்து கூற ஆரம்பித்தார்:

> *அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான். அவன் வெளியே [நாணற் பெட்டியில் வைத்து நைல் நதியிலே] போட்டு விடப்பட்டபோது, பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துத் தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான் (7:20-22).*

ஸ்தேவான் பேசுவதைக் கவனித்த எவரும், மோசேயின்மேல் அவர் அளவற்ற மரியாதை வைத்திருந்தார் என்பதை நம்ப முடிந்திருக்கும்.

பிறகு, தன்னை ஒரு எபிரெயன் என்று புரிந்துகொண்ட மோசே தமது மக்களை விடுவிப்பதற்கு எப்படித் திட்டமிட்டார் என்பதை அவர் கூறினார். மோசே முதன்முறை இஸ்ரவேலர்களை விடுவிக்க முயற்சிசெய்தபோது தமது சகோதரர்களாலேயே புறக்கணிக்கப்பட்டார் என்று ஸ்தேவான், தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடத்தில் கூறினார்:

> *அவனுக்கு நாற்பது வயதானபோது,[12] இஸ்ரவேல் புத்திரராகிய தன்னுடைய சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று. அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாயமாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு, அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை வெட்டி, துன்பப்பட்டவனுக்கு நியாயஞ்செய்தான். தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை. மறுநாளிலே சண்டை பண்ணிக் கொண்டிருக்கிற இரண்டுபேருக்கு அவன் எதிர்ப்பட்டு: "மனுஷரே, நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநியாயஞ் செய்கிறதென்ன" என்று, அவர்களைச் சமாதானப்படுத்தி பேசினான். பிறனுக்கு அநியாயஞ்செய்தவன் அவனைப் பிடித்துத் தள்ளி: "எங்கள்*

*மேல் அதிகாரியாகவும், நியாயாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன் யார்? நேற்று நீ அந்த எகிப்தியனைக் கொன்றதுபோல என்னையும் கொன்றுபோட மனதாயிருக் கிறாயோ" என்றான். இந்த வார்த்தையினிமித்தம் மோசே ஓடிப்போய், மீதியான் தேசத்திலே சஞ்சரித்துக் கொண்டிருந் தான்; அங்கே இருக்கும் போது அவனுக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் (7:23-29).*

யோசேப்பின் நிகழ்ச்சியில் நடந்தது போலவே இதிலும், தேவன் தமது மக்களுக்கு இரண்டாவது வாய்ப்பைத் தந்ததாக ஸ்தேவான் மறுபடியும் விளக்கினார்:

*நாற்பது வருஷம் சென்றபின்பு, சீனாய்மலையின் வனாந் தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடி எரிகிற அக்கினி ஜுவாலையிலே அவனுக்குத் தரிசனமானார். மோசே அந்தத் தரிசனத்தைக் கண்டு, அதிசயப்பட்டு, அதை உற்றுப் பார்க்கும்படி சமீபித்துவருகையில்: "நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்று கர்த்தர் திருவுளம்பற்றின சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. அப் பொழுது மோசே நடுக்கமடைந்து, உற்றுப்பார்க்கத் துணியா மலிருந்தான். பின்னும் கர்த்தர் அவனை நோக்கி: "உன் பாதங் களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமியாயிருக்கிறது. எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கி னேன்; ஆகையால், நீ வா, உன்னை எகிப்திற்கு அனுப்புவேன்" என்றார் (7:30-34).*

மோசே தேவனுடைய விடுதலைச் செய்தியாளராய் இருந்தார் என்ற கருத்தை அவர்கள் தவறவிடாதபடிக்கும், அவர்களின் முன்னோர்கள் மோசேயைப் புறக்கணித்தனர் என்பதை விளக்கும்படிக்கும் ஸ்தேவான் பின்வரும் உண்மை களைத் துணிவாகக் கூறினார்: "உன்னை அதிகாரியாகவும் நியாயதிபதியாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே தேவன், முட்செடியில் அவனுக்குத் தரிசனமான தூதனாலே, தலைவ னாகவும் மீட்பனாகவும் அனுப்பினார்" (7:35). யோசேப்பின் வரலாற்றை போலவே, தேவனுடைய விடுதலையின் செய்தி யாளரை இவர்கள் இரண்டாந்தரம் புறக்கணித்து (அவரைப் பின்பற்றி எகிப்தை விட்டு வெளியேறாத பட்சத்தில்), இவர்கள்

*(அடிமைத்தனத்தில்) மரித்திருக்க வேண்டியதாயிருந்திருக்கும்.*

*வசனம் 35 தொடங்கி, ஸ்தேவான் மோசேயைக் குறித்த வரலாற்றைச் சுருக்கமாகத் தருகிறார்:*

> *அவர்கள் மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே … தலைவனாகவும் மீட்பனாகவும் அனுப்பினார். இவனே அவர்களை அங்கேயிருந்து அழைத்துக்கொண்டுவந்து, எகிப்து தேசத்திலேயும் சிவந்த சமுத்திரத்திலேயும், நாற்பது வருஷ காலமாய் வனாந்தரத்திலேயும், அற்புதங்களையும் அடையா ளங்களையும் செய்தான். இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்கள் சகோதரரிலிருந்து என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக எழும்பப் பண்ணுவார், அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" என்று சொன்னவன் இந்த மோசேயே. சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும்,[13] நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே (7:35-38).*

*மோசேயின் இறுதியான நாற்பது ஆண்டு வாழ்க்கை பற்றிய இக்குறிப்பில் மோசேக்கும், மோசேயின் மூலமாகக் கொடுக்கப் பட்ட நியாயப்பிரமாணத்திற்கும் ஸ்தேவான் மரியாதையை வெளிப்படுத்தினார். மோசேயினிடத்தில் தேவ தூதன் மலையின்மேல் பேசினதாக ஸ்தேவான் குறிப்பிட்டார், மற்றும் ஸ்தேவான், நியாயப்பிரமாணத்தை "ஜீவ வாக்கியங்கள்" (ரோமர் 3:2; எபி. 5:12; 1 பேது. 4:11) என்று குறிப்பிட்டார். மோசேயையோ அல்லது நியாயப்பிரமாணத்தையோ தூஷணமாகப் பேசவில்லை என்பதை, ஸ்தேவான் நிரூபித்தார்.*

*ஸ்தேவானின் வார்த்தைகளுக்கு வேறொரு நோக்கம் - ஒரு ஆழமான நோக்கம் - இருந்தது. "தேவன் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணு வார்" என்று மோசே கூறியிருந்ததை அவர் ஆலோசனைச் சங்கத்தாருக்கு நினைவூட்டினார் . பிறகு மோசே எப்படி யிருந்தார் என்பதையும் நினைவூட்டினார்: அவர் ஒரு அதிகாரி யாக இருந்தார் (வ. 35). அவர் ஒரு மீட்பராக இருந்தார் (வ. 35). அவர் அற்புத அடையாளங்கள் செய்பவராயிருந்தார் (வ. 36). அவர் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தார் (வ. 37). அவருக்கு ஒரு சபை இருந்தது (வ. 38). அவர் தேவனிடத்திலிருந்து பெற்ற செய்திகளை மக்களுக்கு எடுத்துரைத்தார் (வ. 38). நாசேரேத்*

தூரானாகிய இயேசுவோடு உள்ள இவ்விணையான இயல்பு களைக் கவனிக்காதிருப்பது கடினமாகும்.

ஆயினும் இவ்விணையான இயல்புகளை வலியுறுத்த ஸ்தேவான் தயாராக இல்லை. தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களின் பிதாக்கள் இரண்டாவது வாய்ப்பைத் தேவனிடத்திலிருந்து பெற்றபோது, அதை மறுபடியும் அவர்கள் மறுத்து, தேவனால் அனுப்பப்பட்ட மீட்பரைப் புறக்கணித் தனர் என்று அவர்களுக்கு நினைவூட்டினார்:

> *இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படிய மனதாயிராமல் இவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி, ஆரோனை நோக்கி: "எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக்கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம்; ஆதலால் எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை எங்களுக்கு உண்டு பண்ணும்" என்று சொல்லி; அந்நாட்களில் ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள் (7:39-41).*

ஜீவ வாக்கியங்களுக்குப் பதிலாக, அவர்கள் மரித்த விக்கிரகங் களை ஏற்றுக்கொண்டனர். தேவனுடைய மீட்பரை அவர்கள் இரண்டாம் முறையும் புறக்கணித்தபோது, தேவ கோபம் அவர்கள்மேல் வந்தது. வனாந்தரத்தில் இஸ்ரவேலர்களின் புறக்கணிப்பானது, தொடர்ந்து அவர்கள் புறக்கணிப்பார்கள் என்பதற்கு ஒரு முன் நிழலோட்டமாயிருந்ததால், இப்புறக் கணிப்பைத் தேவன் பொறுத்துக் கொள்ளவில்லை என்பதற்கு ஆமோஸ் தீர்க்கதரிசி கூறிய வசனங்களைக்கொண்டு, ஸ்தேவான் வரலாற்றைச் சுருக்கிக் கூறினார்:

> *அப்பொழுது தேவன் அவர்களைவிட்டு விலகி, வான சேனைக்கு[14] ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக் கொடுத் தார்.[15] அதைக் குறித்து: "இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷம் வரையில் காணிக்கை களையும், பலிகளையும் எனக்குச் செலுத்தினீர்களோ என்றும், பணிந்துகொள்ளும்படி நீங்கள் உண்டாக்கின சொரூபங்களா கிய மோளோகினுடைய கூடாரத்தையும் உங்கள் தேவனாகிய ரெம்பான் என்னும் நட்சத்திர சொரூபத்தையும் சுமந்தீர்களே; ஆகையால், உங்களைப் பாபிலோனுக்கு அப்புறத்திலே குடிபோகப் பண்ணுவேன் என்றும், தீர்க்கதரிசிகளின் புஸ்தகத் தில்[16] எழுதியிருக்கிறதே" (7:42, 43).*

*தேவன் இஸ்ரவேலர்களை (எகிப்தின்) அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கியிருந்தார், ஆனால் அவரால் நியமிக்கப்பட்ட இரட்சகர்களை அவர்கள் (வனாந்தரத்திலும், கானான் நாட்டிலும்) தொடர்ந்து புறக்கணித்தபோது, தேவன் அவர்களை மறுபடியும் (பாபிலோனிய) அடிமைத்தனத்துக்குள்ளாக்கினார்!*

## *பரிசுத்த கூடாரங்கள் (7:44-50)*

தேவனுடைய கூடாரத்தைப் பற்றியும் பின்பு அவருடைய ஆலயத்தைப்பற்றியும் குறிப்பிடும் ஸ்தேவானுடைய உரையின் மூன்றாவது பகுதிக்கு, மோளோகினுடைய கூடாரத்தைப் பற்றிய குறிப்பானது ஒரு இணைப்பாகப் பயன்படுகிறது. இம்மூன்றாம் பகுதியில், தேவாலயத்திற்கு எதிராகப் பேசினார் (6:13, 14) என்ற குற்றச்சாட்டிற்கு ஸ்தேவான் பதில் அளித்தார். ஆயினும், மற்ற குற்றச்சாட்டுகளை அணுகிய முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்ட முறையில் அவர் இக்குற்றச்சாட்டை அணுகினார். தேவன், மோசே, மற்றும் நியாயப்பிரமாணம் ஆகியவற்றிற்கு எதிராகப் பேசினார் என்ற குற்றச்சாட்டுகளைப் பொறுத்தமட்டில், இம்மூன்றிற்கும் அவர் மிகவும் ஆழமான மரியாதையைக் காண்பித்தார். தேவாலயத்திற்கு எதிராகப் பேசினார் என்ற குற்றச்சாட்டை - தேவாலயத்திற்கு அவர் மரியாதை செலுத்தினாரா இல்லையா என்பது முக்கியத்துவ மற்றது - என்ற வித்தியாசமான முறையில் அவர் அணுகினார்.

> "மேலும் நீ பார்த்த மாதிரியின்படியே சாட்சியின் கூடாரத்தை உண்டுபண்ணுவாயாக என்று மோசேயுடனே பேசினவர் கட்டளையிட்ட பிரகாரமாக, அந்தக் கூடாரம் வனாந்தரத்திலே நம்முடைய பிதாக்களோடு இருந்தது. மேலும், யோசுவாவுடனே கூட நம்முடைய பிதாக்கள் அதைப் பெற்றுக் கொண்டு, தேவன் அவர்களுக்கு முன்பாகத் துரத்திவிட்ட புறஜாதிகளுடைய தேசத்தை அவர்கள் கட்டிக்கொள்ளுகையில், அதை அந்த தேசத்தில் கொண்டுவந்து, தாவீதின் நாள் வரைக்கும் வைத்திருந்தார்கள்" (7:44, 45).

தங்களுடைய பிதாக்கள், ஆலயமானது எருசலேமில் கட்டப்படுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்பாகவே தேவனைத் தொழுதார்கள் என்பதை ஸ்தேவான் அவரது உரையைக் கேட்டவர்களுக்கு நினைவூட்டினார். தேவன், மோசேயிடம்,

*ஆலயத்தையல்ல கூடாரத்தைக் கட்டும்படியாகவே கட்டளை யிட்டார். அதன்பிறகு இவர்களின் பிதாக்கள் வனாந்தரத்திலும், கானான் தேசத்திலுமாக "தாவீதின் நாள் வரைக்கும்" நானூறு வருடங்களாகக் கூடாரத்திலேயே தொழுது கொண்டனர்.*

*உடன்படிக்கைப் பெட்டியானது நிரந்தரமாக வைக்கப் படும்படி ஒரு கட்டிடம் எழுப்புவது பற்றிய கருத்து தாவீதிடம் இருந்துதான் தோன்றியது. "இவன் (தாவீது) தேவனிடத்தில் தயவு பெற்றபடியினால் [1 சாமு. 13:14; சங். 89:20-37], யாக்கோபின் தேவனுக்கு ஒரு வாசஸ்தலத்தைத் தான் கட்ட வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினான்" (7:46). இக்கருத் துக்காகத் தாவீது பாராட்டப் பெற்றார் ஆனால் தேவாலயத் தைக் கட்டுவதற்கு அவர் அனுமதிக்கப்படவில்லை (2 சாமு. 7:2-13): "[தாவீதின் மகனாகிய] சாலமோனோ அவருக்கு ஆலயத்தைக் கட்டினான்" (7:47; இ.வ. 2 சாமு. 7:2-13). தேவாலயம் இருப்பது மிகவும் அவசியமானதாயிருந்தால், தாவீது அத்திட்டத்தை முன்வைத்த உடனே அது கட்டப் பட்டிருக்கும் என்பதே இவ்விடத்தில் மறைமுகமாக உணர்த்தப் படுகிறது. இதற்கு மாறாக, அநேக ஆண்டுகள் கழித்தே அது கட்டிமுடிக்கப் பெற்றது!*

*பிறகு ஸ்தேவான், தமது நற்பெயருக்கு மிகவும் களங்கம் விளைவிக்கக்கூடிய கூற்றைக் கூறினார் (இது இவர் இதற்கு முன்பு செய்த பிரசங்கங்களிலும் கூறப்பட்டிருக்கலாம், ஒரு வேளை இந்தக் கூற்றே, அவர் தேவாலயத்திற்கு எதிராகப் பேசினார் என்று குற்றம்சாட்டத் தூண்டியிருக்கலாம்): "ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார்" (7:48அ).[17] இப்படிப்பட்ட கூற்றானது, கேட்பவர்களை மனம் கொதிக்கச் செய்திருக்க லாம் - ஆனால் இது தேவ தூஷணமா? சாலமோன் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தபோது, தேவனிடத்தில், "... இதோ, வானங்களும் வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே; நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம்?" (1 இரா. 8:27; இ.வ. 2 நாளா. 6:18) என்று ஜெபித்திருந்தார். ஏசாயாவும் இதே சத்தியத்தை வலியுறுத்தியதை ஸ்தேவான் ஆலோசனைச் சங்கத்தாருக்கு நினைவுபடுத்தினார்:*

"வானம் எனக்குச் சிங்காசனமும் பூமி எனக்குப் பாதபடியுமா

*யிருக்கிறது; எனக்காக நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள்; நான் தங்கியிருக்கத் தக்க ஸ்தலம் எது; இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்க வில்லையா" என்று கர்த்தர் உரைக்கிறார் என்று தீர்க்கதரிசி சொல்லியிருக் கிறானே (7:49, 50; இ.வ. ஏசாயா 66:1, 2).*

*படைப்பு முழுவதுமே தேவனுடைய ஆலயமாகும் என்று ஏசாயா கூறினார்! பிறகு ஏன், மனிதரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்று மறைமுகமாக ஒருவர் குறிப்பிட்டதற்கு ஆலோசனைச் சங்கத்தார் கலவரமடைய வேண்டும்?*

*தேவன் தமது மக்களுக்குள் வாசமாயிருக்கிறார்[18] என்று போதிப்பதற்கு அது தக்க சமயமாயிருந்திருக்க வேண்டும். தேவன், "... நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத் திலும் வாசம் பண்ணுகிறேன்" (ஏசாயா 57:15; 66:2) என்று கூறியுள்ளதாகவும் ஏசாயா குறிப்பிட்டிருந்தார். ஆயினும், ஸ்தேவான் தமது பிரசங்கத்தில் இருந்த எல்லா நூலிழை களையும் பற்றியிழுக்க வாய்ப்புப் பெற்றிருக்கவில்லை.*

## *திடுக்கிடச் செய்யும் முடிவுரை (7:51-53)*

*ஸ்தேவானின் பிரசங்கப் போக்கானது வசனம் 51ல் திடீரென்று, எதிர்பாராாத விதமாக மற்றும் கண்டனம் பண்ணும் விதமாக மாறியது. தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந் தவர்களின் வெறுப்பேறிய முகங்களை அவரால் பார்க்க முடிந்திருந்ததா? அவர் கூற வந்த எல்லாவற்றையும் கூற அவருக்கு நேரம் இருக்காது என்பதை அவர் அறிந்தாரா? "தீர்க்கதரிசி" (வ. 50) என்ற அவரது குறிப்பு யூதர்கள் தீர்க்கதரிசி களை எவ்விதம் நடத்தியிருந்தனர் (வ. 52) என்பதை மட்டும் ஸ்தேவானுக்கு நினைவு படுத்தியதா? காரணம் எதுவாயிருப் பினும், ஸ்தேவான் தற்காப்பு வாதத்திலிருந்து விரைவாக குற்றம் சாட்டும் வகைக்குச் சென்று, தமக்கெதிராக அவர்கள் கூறிய குற்றத்தைச் செய்தவர்கள் அவர்களே என்று குற்றம் சாட்டினர்:*

*வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவி களிலும்[19] விருத்தசேதனம் பெறாதவர்களே, உங்கள் பிதாக் களைப்போல[20] நீங்களும் பரிசுத்த ஆவிக்கு[21] எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் யாரை உங்கள்*

*பிதாக்கள் துன்பப்படுத்தாமலிருந்தார்கள்? நீதிபரருடைய[22] வருகையை முன்னறிவித்தவர்களையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்பொழுது நீங்கள் அவருக்கு துரோகிகளும் அவரைக் கொலை செய்த பாதகருமாயிருக்கிறீர்கள். தேவ தூதரைக் கொண்டு நீங்கள் நியாயப்பிரமாணத்தைப் பெற்றிருந்தும், அதைக் கைக்கொள்ளாமற்போனீர்கள் என்றான் (7:51-53).*

ஸ்தேவான் தேவனைக் கனப்படுத்தவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டினார்கள், ஆனால் தேவன் யாருக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பியிருந்தாரோ, அவர்களை எதிர்த்து நின்ற அந்த மக்களே பரிசுத்த ஆவியானவராகிய தேவனை எதிர்த்தவர்களாயிருந்தனர்! மோசேயையும், நியாயப் பிரமாணத்தையும் மதிக்கவில்லை என்று ஸ்தேவான் மீது அவர்கள் குற்றம் சாட்டினார்கள், ஆனால், அவர்கள்தான் நியாயப்பிரமாணத்தைக் காத்துக்கொள்ளாமலிருந்தார்கள்! அவர்களது செவிகள் சத்தியத்தைக் கேட்க மறுத்தன! அவர்கள் இருதயங்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தன! அவர் களின் கழுத்துக்கள் சத்தியத்திற்கு வணங்க மறுத்தன!

அவர்கள் தங்கள் பிதாக்களைப் போலவே இருந்தனர்! அவர்களின் பிதாக்கள் யோசேப்பைப் புறக்கணித்திருந்தனர். அடுத்து, அவர்கள் - இரண்டு முறை - மோசேயைப் புறக்கணித் திருந்தனர். கடைசியாக, அவர்கள் தீர்க்கதரிசிகளைப் புறக் கணித்திருந்ததோடு, அவர்களைக் கொலை செய்துமிருந்தனர்! இதேபோல, ஆலோசனைச் சங்கத்தார், நீதிபரராகிய இயேசு வந்தபோது அவரைப் புறக்கணித்திருந்தனர் - அவரைக் கொலையும் செய்திருந்தனர்!

சில சமயங்களில் விளக்கவுரையாளர்கள், ஸ்தேவான் திடீரென்று ஆக்ரோஷமடைந்ததாகவும், அவரது கண்கள் மின்னியதாகவும், அவரது விரலால் குத்திக் காட்டி - இவையா வும், ஆலோசனைச் சங்கத்தார் அவருக்கு மரணத்தீர்வையிடத் துணிந்ததற்குக் காரணமாயின என்றும் சித்தரிக்கின்றார்கள். “கிருபையினால் நிறைந்த” (6:8) ஒரு மனிதருக்குரிய பண்பு களாக இவை காணப்படவில்லை, அவர் ஆலோசனைச் சங்கத் தாரை, “சகோதரர்களே, பிதாக்களே” (7:2) என்று அழைத்திருந் தார், பின்பு அவர், “கர்த்தாவே, இவர்கள் மேல் இப்பாவத்தைச் சுமத்தாதிரும்” (7:60) என்று ஜெபமும் செய்தார். வசனம் 51

முதல் 53 வரையுள்ள வார்த்தைகளில் ஆலோசனைச் சங்கத்தாரைக் கோபப்படுத்துவது என்பது ஸ்தேவானுடைய நோக்கமல்ல என்பதே எனது யோசனையாகும். ஆனால், அவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் தந்து அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதற்கான ஒரு முயற்சியாக இது இருந்தது - இது அவர்களது கல்லான இருதயத்தைப் பிளப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியாகும். ஸ்தேவான் தமது இருதயம் உடைந்து போன நிலையில் அவர்களிடம் மெதுவாகப் பேசியதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது.

## முடிவுரை

ஸ்தேவான் தமது சிறப்பு மிக்க பிரசங்கத்தில் அவ்வளவு தூரமே செல்ல முடிந்தது. அவரது உரையைக் கேட்டவர்கள் தங்கள் காதுகளைக் கைகளால் மூடிக் கொண்டு, உரத்த சத்தமாய் அவரை நோக்கிக் கூக்குரலிட்டுச் சென்று, ஆலோசனை சங்கத்தின் அறையிலிருந்து அவரை வெளியே இழுத்துக் கொண்டு வந்தனர். ஆலோசனைச் சங்கத்தார், அவர்கள் பிதாக்களைப் போலத் தேவனுடைய செய்தியாளர்களைப் புறக்கணியாதிருக்கும்படி ஸ்தேவான் அவர்களுக்கு அறைகூவல் விடுத்திருந்தார், ஆனால் அவர்கள் தங்கள் பிதாக்கள் செய்திருந்தது போலவே, ஸ்தேவானையும் கல்லெறிந்து கொன்றனர்.

ஸ்தேவானின் பிரசங்கத்தில் நமக்குப் பாடங்கள் எதுவும் உள்ளனவா? பல உள்ளன. எடுத்துக்காட்டாக, நமது இரட்சிப்புக்காக தேவன் செய்துள்ளவை பற்றிய வரலாற்றை நாம் அதிகமாய் மதிக்க வேண்டும். இன்றைய நாளில், தேவனுடைய செய்தியாளர்களைப் புறக்கணிக்காமலிருப்பதில் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்பதே நமக்கு அதிகமாய் அறைகூவல் விடுக்கும் பாடம் என்பது நிச்சயமாகும். "பூர்வ காலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார் ..." (எபி. 1:1, 2) என்று நாம் அறிகிறோம். இயேசு, ''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும்"

*(யோவா. 12:48) என்று கூறினார்.*

*நாம் ஒவ்வொருவரும், "இயேசு எனக்கு முன்பாக நிற்கையில், நான் அவரை ஏற்கின்றேனா அல்லது மறுக்கின்றேனா?" என்று நம்மையே கேட்டுக்கொள்வது தேவையாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், நான் யாருடன் நிற்கின்றேன்? ஸ்தேவானுடனா அல்லது சனதெரீன் சங்கத்தாருடனா?*

## *காட்சி-உதவிக் குறிப்புகள்*

*ஸ்தேவானால் தமது பிரசங்கத்தில், மறு கண்ணோட்டத் திற்குக் கொண்டுவரப்பட்ட வரலாற்றை விளக்குவதற்கு நீங்கள் பின்வரும் எளிய வரைபடத்தைப் பயன்படுத்த முடியும்:*

*தேவனுடைய செய்தியாளர்கள் புறக்கணிக்கப்பட்டதைக் காட்டுவதற்கு ஸ்தேவானின் பிரசங்கத்தில் காணப்படும் காலக்கோடு: ''புறக்கணிக்கப்படுதல்'' என்ற வார்த்தையை வரைபடத்தின் மேல் பகுதியில் எழுதுங்கள், பிறகு சித்தரிக்கப் பட்டுள்ள செய்தியாளர் ஒவ்வொருவர் படத்திற்கும் அவ்வார்த்தையிலிருந்து ஒரு அம்புக் குறியை வரையுங்கள்.*

*விருப்பமிருந்தால் கற்களால் ஆன பலிபீட மேடையொன் றின் வரைபடத்தை "ஆபிரகாம் ... 12 கோத்திரப் பிதாக்கள்" என்பதற்கு முன்பாகவும், ஒரு எரியும் முட்செடியின் வரை படத்தை "மோசே எழுப்பப்படுதல்" என்பதற்கு முன்பாகவும், ஆசரிப்புக் கூடாரத்தின் ஒரு வரைபடத்தை ''மோசே இஸ்ரவேலரை வழி நடத்துதல்'' என்பதற்கு முன்பாகவும், தேவாலயத்தின் ஒரு வரைபடத்தை "வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட நாட்டில் இஸ்ரவேலர்கள் பிரவேசித்தல்" என்பதற்குப் பின்னாகவும் நீங்கள் சேர்த்துக் கொள்ளலாம். தேவாலயம் கட்டப்படுவதற்கு நீண்ட நாட்களுக்கு முன்னதாகவே எருசலே மைத் தவிர மற்ற இடங்களிலும் மக்கள் தேவனைத் தொழுது கொண்டனர் என்று ஸ்தேவான் வலியுறுத்தியதைக் காண்பிக்க, இதை நீங்கள் பயன்படுத்த முடியும்.*

*பழைய ஏற்பாட்டுக் கால உலக வரைபடத்தின் பெரிதாக் கப்பட்ட வடிவத்தை நீங்கள் விரும்பித் தேர்ந்தெடுத்தால், இவ்விதழின் வேறொரு பக்கத்தில் உள்ள வரைபடமானது ஸ்தேவானின் பிரசங்கத்தை மறுபடியும் கூற உங்களுக்கு*

உதவும். முக்கிய பாத்திரங்கள் ஒரு சிலரின் உருவ வரைபடங்களையும் சேர்த்துக் கொள்ளவும். நீங்கள் இவ்வரலாற்றை மறுபடியும் கூறி வருகையில், தேவனுடைய செய்தியாளர்கள் ஒவ்வொருவரையும் யூதர்கள் புறக்கணித்தைக் கூறும் ஒவ்வொரு தடவையும், "புறக்கணிக்கப்படுதல்" என்ற வார்த்தையை வரைபடத்தின் தகுதியான இடங்களில் சேர்த்துக் கொள்ளவும்.

## பிரசங்கக் குறிப்புகள்

ஸ்தேவான், தனது உரையைக் கேட்டவர்களுக்கு, தான் கூறிய வரலாற்றுக் குறிப்புகள் யாவும் பழக்கமானவைகள் என்று எண்ணி, அவைகளை விவரித்துக் கூறாமல் விட்டார். எனது பாடத்தில் நானும் இதே விதமான அணுகுமுறையைக் கையாண்டிருக்கிறேன். ஸ்தேவான் குறிப்பிட்ட விஷயங்கள், உங்கள் உரையை கேட்பவர்களுக்குப் பழக்கமில்லாதவைகளாயிருந்தால், அவைகளை மறுகண்ணோட்டமாய்க் காண நீங்கள் நேரம் எடுத்துக் கொள்ள விரும்பலாம். அவைகளைக் காண்பதற்காக உதவி செய்ய, நான் உங்களுக்கு பழைய ஏற்பாட்டின் வசனக் குறிப்புகள் ஒரு சிலவற்றைத் தந்துள்ளேன்:

அப். 7:17-44 வசனப்பகுதியானது எபி. 11:23-29 உடன் இணைக்கப்படுகையில் மோசேயின் இயல்புகள் பற்றிய நல்லதொரு இணை விபரங்களைத் தர அடிப்படையாகின்றது. எபி. 11:23-29 ஐப் பற்றிய எனது பிரசங்கத்தையும், மோசேயைப் பற்றியும் இன்றைக்கான சத்தியம் (நவம்பர் 1992) இதழில் காணவும்.

தேவைப்படுகின்ற ஒரு பிரசங்கத்தை அப். 7:26 ஐ வசனப் பகுதியாகப் பயன்படுத்திப் பிரசங்கிக்க முடியும்: "மனுஷரே, நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள்; ஒருவருக்கொருவர் அநியாயஞ் செய்கிறதென்ன." (இதை நீங்கள், ஆதி. 13:8ல் ஆபிரகாம் லோத்தை நோக்கிக் கூறிய, "எனக்கும் உனக்கும் ... வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர்" என்ற வார்த்தைகளுடன் இணைக்க விரும்பலாம்.)

## குறிப்புகள்

[1]அப்போஸ்தரல்லாத ஒருவர் தனியாகப் பிரசங்கித்தது வார்த்தைக்கு - வார்த்தை அப்படியே தரப்பட்டிருப்பது இது ஒன்றுதான் (வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இது ஒரு அப்போஸ்தலருடன் தொடர்பற்றதாக உள்ளது). [2]ஸ்தேவான் முடிப்பதற்கு முன்பு இப்பிரசங்கம் இடையூறு செய்யப்பட்டதாக ஜிம்மி ஆலென் அவர்கள் நம்புகின்றார், நானும் இதை ஒப்புக் கொள்கிறேன். எடுத்துக்காட்டாக புதிய ஏற்பாட்டுப் போதனையின் சாரமாகிய உயிர்த்தெழுதல் இங்கு குறிப்பிடப்படவே இல்லை. ஸ்தேவான் அநேக கருத்துக்களை எடுத்துக் கூறத் திட்டமிட்டிருக்க சாத்தியக் கூறுண்டு, ஆனால் அவ்வாறு செய்யுமுன் அவர் கொலை செய்யப்பட்டார். [3]கல்தேயரின் ஊர் என்ற பட்டணத்தில் தேவன் முதன்முதல் ஆபிரகாமினிடம் வந்தார். பழைய ஏற்பாட்டு உலகத்தின் வரை படத்தில் காணவும். கல்தேயா என்பது தெற்கு பாபிலோனின் ஒரு மாவட்டமாகும். இது பாபிலோனின் எல்லாப் பகுதிகளுக்குமான ஒரு பெயராக நாளடைவில் மாறியது. [4]ஆதி. 17:9-14, 21 ஆகியவற்றைக் காணவும். [5]ஆதி. 22:18; அப். 3:25; கலா. 3:16. [6]ஆதி. 37:3, 4, 25-28. [7]ஆதி. 39:2, 21. [8]ஆதி. 41:38-45, 54. [9]ஆதி. 41:54. [10]எபிரெய வேதாகமம் "எழுபது பேர்" என்று கூறுகிறது (ஆதி. 46:27; யாத். 1:5; உபா. 10:22) ஆனால் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பானது (செப்துவஜிந்த்) ஆதி. 46:20ல் மனாசேயின் மகன் ஒருவரின் பெயரையும், எப்பிராயீமின் இரு மகன்களின் பெயர்களையும், அவ்விருவருக்கும் பிறந்த (யோசேப்பின்) பேரன்கள் இருவரின் பெயர்களையும் கூடத்தருகிறது - இவ்விதமாக அந்த எண் "எழுபத்தைந்து" ஆயிற்று.

[11]ஆதி. 45:17-21. [12]இது யாத்திராகமத்தில் காணப்படாத ஒரு விபரமாகும்: மோசே எகிப்தை விட்டுச் செல்லும் போது நாற்பது வயதுள்ளவராயிருந்தார். [13]சங். 22:22ல் காணவும். "சபை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை *ekklesia* என்பதாகும், இது புதிய ஏற்பாட்டில் "சபை" என்றே வழக்கமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், இது, கிறிஸ்துவின் சபை (மத். 16:18) வனாந்தரத்தில் இருந்தது என்று பொருள்படுவதில்லை. இவ்வார்த்தை "மக்கள் கூட்டம்" என்ற பொருளிலேயே இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நடபடிகள், 1 இதழின் சொற்பொருள் அகராதியில் "Church" - சபை என்ற வார்த்தையின் கீழ் காணவும். [14]"வான சேனைகள்" என்பது சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களைக் குறிக்கின்றது. உபா. 17:3; 2 இரா. 17:16; 21:3; 2 நாளா. 33:3, 4, 35; எரே. 8:2; 19:13 ஆகியவற்றைக் காணவும். [15]"தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" என்று ரோமர் 1:24, 26, 28ல் உள்ள வார்த்தைகளோடு இவ்வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும். [16]இது "சிறிய தீர்க்கதரிசனங்கள்" அடங்கிய புத்தகச் சுருளாகும். குறிப்பாக, ஸ்தேவான் ஆமோஸ் 5:25-27ஐ செப்துவஜிந்திலிருந்து மேற்கோள் காட்டினார். [17]பின்னாளில், அந்நியரின் ஆலயங்களைப் பற்றிப் பவுலும் இதே போன்று கூறினார் (அப். 17:24). [18]தேவன் சபையில் வாசம் செய்கிறார் (1 கொரி. 3:16, 17). 1 பேது. 2:4-10 ஐக் கவனியுங்கள். [19]"வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்களே" என்பது முரட்டுத்தனம், முன் அனுமானம் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றைக் குறிக்கும் பழைய ஏற்பாட்டுச் சொல் வழக்காகும் (யாத். 33:3, 5; லேவி. 26:41; எரே. 6:10; எசே. 44:7) "வணங்காக் கழுத்து" என்பது நுகத்தடியைத் தனது கழுத்தில் வைக்கப்படுவதை மறுக்கும் முரட்டுத்தனமுள்ள எருதைக் குறிப்பிடுகிறது. விருத்தசேதனம் என்பது தேவனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்வதன் அடையாளமாயிருந்தது. ஆகவே, "இருதயத்திலும், செவிகளிலும் விருத்தசேதனம் பெறாதவர்கள்" என்பது அவர்கள் தேவனுக்கு ஆவிக்குரிய வகையில் அல்ல, மாம்சப்பிரகாரமாகவே கீழ்ப்படிந்திருந்தனர்

*என்பதைச் சுட்டிக்காட்டியது. அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப் படுத்தினர், மற்றும் அவர்கள் தேவனுடைய செய்தியாளர்களைக் கவனிக்க மறுத்தனர். [20]எபி. 11:32-38ஐக் காணவும்.*

*[21]எண். 27:14. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் பேசிய தீர்க்கதரிசி களுக்கு எதிர்த்து நின்றதன் மூலம், அவர்கள் பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நின்றனர் (2 பேது. 1:21). [22]அப். 3:14ஐக் காணவும்.*